விஷ்ணுமயம்

ஸ்ரீ மகா பாகவதம்.

நெல்லி நகர் அருணாசலகவிராச சிரோமணியும் மதுரகவி
ஸ்ரீ வாதராஜ ஐயங்கார் அருளியது.

இரண்டாம் புத்தகம்.

இஃது

கோயமுத்தூர் ஸப்டிவிஷன் தமிழ்ப் பண்டிதர்
பரமபரை விதேயரான
பவானி பாலபாரதி முத்துசாமி ஐயர் அவர்கள்
கோயமுத்தூர் விதேயரான
மைனர் ஸ்ரீ கந்தசாமி முதலியார் டபுள்யூ. ஏ. ஸி.
லிட்டரேரி லண்டன் மிஷனரி ஸ்காலர் தமிழ்ப்பண்டிதர்
ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள்
காளபட்டி விதேயரான
ல. வே. திருமலைகொண்ட நாயக்கர் அவர்கள்

என்னும் மூவராலும்
பலதேச வித்வத்பிரதிஷ்டாசகாமணி பரிசோதிக்கப்பட்டு
அனுமதி பிரதிஷேதனைசெய்,

கலை வித்வான் ல. வே. தி. அவர்கள் குமாரர்
தி வி. சிங்கிர் நாயக்கர் அவர்களிடம்
அனுமதிபெற்று,
பி. நா. பிதப்பர முதலியார் அவர்களது
சென்னை ஸ்ரீபவானி பாலபாரதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1913.

Copy right Registered.

805.

முகவுரை.

இம்மகா பாகவதத்தில் கண்ணல் சரிதங்களின்பெறக் கூறப் பட்டிருக்கின்றது. இங்ஙனங் கண்ணன் சரிதங் கூறிய பாகவதங் கள் இதிகாசம், புராணம், சம்மிதை, உபசம்மிதை, விஷ்ணு ரக சியம், விஷ்ணுயாமளம், கௌதமசம்மிதை என ஏழுதிறத்தின ன்ப. அவற்றுள் தமிழுலகுணர மொழிபெயர்க்கபபட்டனு இதி காசு பாகவதம் புராணபாகவதம் என்னும் இரண்டுமேபாம். அவற் றுள் சூர்ணிகைகள், விருத்தங்கள், பத்தியங்கள், வாக்கியங்கள், தண்டகங்கள் என்பவற்றுணிறைந்த இருநூற்றதியாயங்களையுடைய 12 கந்தங்களாக வியாச முனிவராற் செய்யப்பட்ட இதிகாச பாக வதம் சற்றேறக்குறைய ஐயாயிரம்செய்யுள்களால்மொழிபெயர்த் தியற்றப்பட்டுள்ளது. அறிஞர்புகழும் ஆரியப்பபுலவரா லியற் றப்பட்ட இது கோமளபுரம் இராஜகோபால பிள்ளையவர்களால் சிலகாலத்தின்முன் பரிசோதித்து அச்சியற்றப்பட்டு வெளியுலாவு கின்றது. அதற்கு நெடுநாள் முன்முதற்கொண்டு இவ்விதிகாச பாக வதத்தின்படி எழுதப்பட்ட தமிழ்நடை அசசுவாய்த்தோன்றிதமிழ் நாடெங்கும் உலாவுகின்றது.

புராணபாகவதம். 36000 சுலோகமுடைய இதை இயற்றி ஞரும் வாதராயணமுனிவரேயாம். இதில் 25 சிதைகளடங்கியிருக் கின்றன. எம்பெருமான் திருவவதாரங்களில் ஆறு திருவவதாரங் களின் சரித்திரம் விரிவாகக்கூறப்பட்டுள்ளது; ஒவ்வொரு அத்தி யாயத்திற்கும் தலைப்பில் கடவுள் வாழ்த்துண்டு. பெரும்பாலும் அநுட்டிப்பு சுலோகங்களாலும் சிறபான்மை பிறவற்றுலும் அ மைந்த அறுநூறு அத்தியாயங்களையுடையது. கந்தம் என்னும் பகுப்பு இதில் இல்லை. தசாவதாரங்களும் இதிற்கூறப்பட் டிருக் கின்றன. இச்சரித்திரங்களைக் கூறினர் நாரதபகவான். கேட்டார் உருக்குமிணிப் பிராட்டியார். இதற்குத்தான் மகாபாகவதம் என்று பெயர். பின்னர் இதனைச் சுகமுனிவர்கூறப் பரீக்ஷித்துக் கேட்ட னன் என்ப. வியாசர்செய்த புராணம் பதினெட்டனு ளொன்றுகிய விம்மகாபாகவத புராணத்தைத் தமிழுலகுணர்ந்துய்ய மொழிபெ யர்த்தியற்றினர் நெல்லிநகர் அருளாளதாசரென்னும் மதுரகவி ஸ்ரீவரதராஜ ஐயங்கார். அவர் இதை சற்றேறக்குறைய 9000

செய்யுள்களுர் லியற்றி, இற்றைக்கு 350 வருஷங்களின் முன் சுப கிருதுவருஷம் சித்திரைமீ குருவாரம் உத்திராட நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில் திருவரங்கத்தில் அரங்கேசர் முன்னிலையில் அறிஞர்களறிய அரங்கேற்றினர் என்ப. அது இம் மகாபாகவதத் தின் திருவரங்கப்படலத்தில் 2 ம்

ஆயுமறையோரெண்ணவருஞ்சகார்த்த மாயிரத்தோனூற்றோடு பத்தஞ்சார, தூயசுபகிருதுவினின்முதன்மாதத்திற் முலவருகுருவாரத் துத்திராடநாளி, னேயமுடனெல்லிகர்வரதராச னிகரிலரங்கத்திலர வணையினுங்கு, நாயகனமுன்னறிஞர்மகிழ்ந்திடவேவாசு தேவகதை யரங்கேற்றினலனுற்றனே.

என்னும் செய்யுளால் விளங்குகின்றது.


இம்மகாபாகவதத்தை அச்சிடவேண்டுமென்று புங்கத்தூர்க் கந்தசாமிமுதலியார் என்பவர் சற்றேறக் குறைய 25 வருஷங் களுக்குமுன் முதற்கொண்டு வருந்தி முயற்சித்து இற்றைக்கு நா லிந்து வருஷங்களின் முன் 4664 செய்யுள்களோ மாத்திரம் அச் சியற்றி வெளிவிட்டார். எஞ்சியதையும் விரைவில் வெளிவிட வேண்டுமென்று எண்ணியிருந்த அவர்கருத்து முடிவெய்து முன் அவர் ஆயுள் முடிவெய்தினமையின் அது வெளிவராதொழிந்தது. அதை வெளிப்படுத்துமாறு ம-ா-ா-ஸ்ரீ, இராமசாமி முதலியாரவர் களைப் பலரும் பலமுறையும் தூண்டினமைபற்றி அவர்களும் அதிற் கருத்தைச்செலுத்தி விரும்பியபடி நான்களும் பற்பல ஏட்டுப்பிரதி களைக்கொண்டு இயன்றவரை பாடபேதப் பரிசோதித்துச் சிற்சில பிரதிகளிற் காணப்படுமாறு வயினதேயப் படலத்தையும் உடன் சேர்த்து வெளிப்படுத்தினேம. என்றாலும் ஒரு சிறிதும் பிழை யறப் பரிசோதித்தோமென்பேமா! இல்லை, இல்லை. இறைவ னொருத்தொழிந்த ஒருவராலும் அமைதியலாமை ஆருமறிவர். இப்ப திப்பில் ஏதேனும் குறைகள் காணப்படின் அவற்றை நேரே எங் களுக்கு அறிவிப்பவர்களிடத்து மிக்க நன்றியுடையர்களாய் வந்த னஞ்செலுத்துவதுடன் அவற்றைத் திருத்தி மறுபதிப்புப் பதிப் பிக்கும்போது பதிபபிப்போம்.

பா. மு.

ச. தி.

கா. ல. வே. தி.

1891. விசுர்தி ஆவ.



விஷ்ணுமயம.

ஸ்ரீமகாபாகவதம்.

சுருக்கம்.

மலரவன் படைத்தவிம்மாநிலத்திலே, எந்நாட்டிலுஞ்சிறந்து விளங்கும் விதர்ப்பநன்னாட்டிலே, குண்டினபுரத்தைத் தனக்கு இராஜதானியாகக் கொண்டு அந்நாட்டை ஆண்டுகொண்டு வீடுஎன்றோர் மன்னவன் இருந்தான். அவன் அரசர்க்கு வேண்டுங் குணங்களில் அணுவளவுங் குறைதலில்லாதவனுய் அழகுறு செங்கோல் வழுவா தோச்சி வருங்காலத்தில் அச்சுதன்றிருவருளால் உருக்குமன் முதலாகவைவர் புத்திராகளைப் பெற்றிருந்தும் ஓர்பெண்மகவு தனக்கில்லாக்குறையை நினைந்து பெரிதும் வருந்தி, அதுகாலையில் அவன்மனைவியும் அவ்வாறு மனம்வருந்திக் கண்ணீர்வீழ்த்தக்கண்டு "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவமீண்டு முயலப்படும்," என்றபடி பெண் மகவின்று தன்குறை தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அரசை அமைச்சர் மாட்டு விடுத்து மனைவியுடன் காடுசென்று ஈரடியாலே மூவுலகளந்த வெம்பிரானை நோக்கிப் பல நாளாகப் பகர்தற்கரிய பெருந்தவஞ் செய்தனன். அத்தவத்திற் கிரங்கி அரிமுன்னின்று நீவேண்டியவரம் யாதென, எம்பெருமானே மலர்மகளையொத்த வடிவுடன் குணங்களிலுங் கற்பிலும் வானத்தும் வையத்தும் ஒப்புயர்வில்லாதவளாக ஓர் பெண்மகவைஅருளுவதோடு நற்குண நற்செய்கையுடன் எழின்மிருத்தவனுய் ஒப்புயர்வின்றி விளங்கும் ஒருவனே யவண் மருண்ணும்படியும் அருள் புரியவேண்டும் என இறைஞ்ச அங்ஙனமாகுக என வரந்தந்து விதர்ப்பனுற்பன் முறையும் வணங்கப்பட்டு அவன்முன் மறைந்து மலரவண் மதிமுகநோக்கி நீ முன் சிதையாய்ப் பிறந்தபோது பிரிவுற்றதுபற்றி வருந்தினயாதலின் அதுதீர்ப்பது கருதி முன் நான் யாதவர் குலத்திற்பிறக்கின்றேன். பின் நீ விதர்ப்பமன்னன் மகளாகென்று கூறக்கேட்டு மலரவண் மனமிசைந்தனள். அரியருள்பெற்ற

அரசனும் மனைவியோடு குண்டினபுரம்போய் அருமைகவீனுங்கா லம் எப்போது வாய்க்குமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருக்க நா ளாண்டு கழிந்து நாரணன் யாதவகுலத்திற் சனித்தபின் விதர்ப்பன் மனைவி கருவுற அவளது மனவியற்றில் மலர்மகண் மன்னினள். பத்துத்திங்களுங்கழிந்து பிறந்து உரியகாலங்களில் சிறபபீகள்செய் யப்பெற்று உருக்குமணிஎனப் பெயருடையளாய்க் கின்னரரெனக் கீத வேதிசை கற்றுக்கலை மகளுள நானுமாறு புராணங்கள் பல வோதி ஒப்பிலியெனும்படி வாழ்ந்துவருங்கால், ஸ்ரீநாள்பணியும் அன்புநிறை யந்தணனன நாரதமுனிவன் வீணையேந்திய கையுடை யனுய் உருக்குமணிப்பிராட்டியார் திருமுன்பு வருதலும்ம் பிராட்டி யார் எழுந்து அடிபணிந்து ஆதனத்திருத்திப்பின் தாமிருந்துமுனி வரைநோக்கி ஸ்வாமி தேவரீர்கண்டடை தற்குஅடியேன்முன்செய்த தவத்தைநோக்கின் அளவில்லாததேயாகும் என்றுகூறி மூவரென மூவுலகத்தையும் அளித்தழித்தலிக்கும இறைவன்யாவன் ? அவன் யாண்டுளன் என்பது சிறக்க உரைக்குதி எனக்கேட்டனள். உடனே முனிவரும் பெருமகிழ்ச்சியடைந்து அவ்வரியின் இருப்பு முதலிய வற்றையும் ஆதிமூலமென்றழைத்த ஆணியினிடரகற்றி யாதரித்த தையும்கூறினர். அதுகேட்ட பிராட்டியார் காதலித்துக் கேட்கப் பின்னும் அரிசெயலியும் அவனடியார் செயலியும் பலவாறுகச் சொல்லிக்கொண்டு வருபவர் தசரதராமசரித்திரஞ் சொல்லக்கேட் டுப் பிராட்டியார் முனிவர் தலிவரைநோக்கி எந்தையே அவ்விரா மனை நிகர்ப்பார் இப்போது இவ்வுலகில் யாரேனும் உளரோஎனக் கேட்ப முனிவர் மனமகிழ்ந்து அத்தன்மையார் ஒருவருண்டு. யா ரெனில் விற்றொழிலாலும் வடிவினுலும் மிக்கருணத்தாலும் சுற்று நின்ற நூலுணர்வினுலும் ஒப்புயர்வின்றி விளங்கும் துவரை மன் னன் என்றுகூறியருளினர். அதுகேட்டுப் பிராட்டியார் அம்மன் னன்யார் ? பிறந்தகுலமென்ன ? அரசுசெய்யும் பாரெது ? அவன் பெயரென்ன ? அவன் பகைவர்களை வென்ற வரலாறுமன்ன ? விவர மாக விளம்பவேண்டுமென்று வினவ நாரதமுனிவர் மகிழ்ந்து வட மதுரைமன்னன் போசன்மகனுகிய உக்கிரசேனன்மகள் தேவகி வயிற்றில் கண்ணன் திருவவதாரம்செய்தது முதலாகிய கிருஷ்ண சரித்திராமிர்தத்தைப் புகட்டப் பிராட்டியார் செவிவாயாகவுண்டு தேக்கி மனமோடாவி யக்கண்ணன் கழலிணைபற்ற வழகிய சித்தி ரம்போலசைவறவிருந்தனர். பின் நாரதமுனிவர் கண்ணன் குண திசயங்களைக் கட்டுரைத்துப்பாவாய் அவ்வண்ணல்முன் மிதிலையிற் சென்று சிலைமுறித்துச் சீதையை மணந்தாற்போல் துவரையம்ப

தியினின்று இவ்வண்வந்து நின்னை மணப்பனென்று வேதமொழிக ளால் வாழ்த்திச்சென்றனர். அத்தவனடிபணிந்து அனுப்பிய பிராட டியார் கண்ணன்மீது காதல்கொண்டு கலியிழந்து சோர்வுறமேகலை தலமிசை விழுமெல்ல மலிமீதூர நன்மலர் வெந்து பொடியாகமார் பிலணியாரங்கள் வெடிபடப் பரந்தாமன் வடிவங்களை நினைந்து பல வாறுபிதற்றிச் சோர்வுற்றனர். சேடிகள் அதுகண்டு பனிநீர் தெ ளித்துயிர்மேவச்செய்யச் சேடியர்களைநோக்கி மங்கைமீர் என்னு யிரிருக்கச்செய்யவேண்மிவீரேல் கண்ணன் வடிவத்தைக் கவினுற வரைந்துதருமின் என்றனர். உடனேயவர்கள் அவ்வாறுசெய்து தரக்கண்டு கண்ணனையே நேரிற்கண்டாற்போல அகமகமகிழ்ந்து அப்படம்முன்னிலையாகப்பேசி வருந்தினர். அதுகாலையில் விதர்ப்ப மன்னன் தன்மகளின் பருவம்நோக்கி மணம்புரிவிக்குங் கருத்து டையனாய் அமைச்சர் முதலாயினரைக்கூட்டித் தன்மங்கைக்குமகு ணனுவான் யாரெனவினவலும், அவர்கள் அரசனைநோக்கிவேந்தே! உலகததில் தந்தைதன் மகளுக்குக் கல்வியுடையவனே கணவனை விரும்புவான். தாயோ தனமுடையானே மருமகனாக வேண்டுவாள். மடந்தையோ மன்மதனையொத்த வழகுடையானே கணவனாக வேண்டுமென்று விரும்புவாள். இம்முத்திறத்தினரது விருப்பத் திற்கும் இசைந்தநாயகன் துவரைமன்னனாகிய கண்ணன்தானென் றுகட்டுரைத்தார்கள். உடனே விதர்ப்பமன்னன்மகன் உருக்குமின் என்பவனெழுந்து சினந்து அவ்வவைமுன் கண்ணனையிழித்துப் பலசொல்லி "என் தங்கையைச்சேதிபராசன் மகன் சிசுபாலனுக் கேயன்றிக் கண்ணனுக்குக் கொடுக்கலொட்டேன். நானையதினமே சிசுபாலனுக்குக் கொடுப்பேன்," என்றுசொல்லி யுடனே வருமா றுசிசுபாலனுக்குத் தூதேவி மறுநாளில் உருக்குமிணி திருமண மென்று ஊரெங்கும் முரசறையும்படி கட்டளையிட்டான். அது கேட்டுப் பிராட்டியார் சகிக்கலாற்றுதவராய் மனமிகநொந்து "என், தந்தைவலியில்லான். தமயனே வறனிலாத வதிபாவி, வேறுதுணை யுங்காணேன். நந்தனருண்மைந்த நீ என்னையடைந்தருள்" என்று சொல்லி, "காளமுகில் வண்ணன்வரும் வகைகாணேன். நானையெ னது முன்னோன் அதிபாதகமியற்றுவனே. அதன்முன் நானே எனதுயிரைமாய்ப்பேன்: இதுவே செயத்தருங்கருமம்" என்று கூறியயர்ந்தார். அதுகண்டு சேடியர்கள் வருந்தி எடுத்தணைத்து ஏற்றிடுமுபசாரங்கள் செய்து உயிர்ப்பித்து அவர்களுள் மன்மதனை விலாசியென்பாள் பிராட்டியை நோக்கிப்பாவாய் நான்முகனையொத் தகும்புரோகிதரை இப்போதே கண்ணனிடம் தூதேவினால் உன்

கருத்தீடேறும் என்றுரைக்க, பிராட்டியார் இசைந்து புரோகிதனை யழைப்பித்து தன்கருத்தைக் கண்ணனறியும்படி வரைந்துடனே துவரைபோய் மீளுமபடியனுப்பினர். அவனும் உடனே துவார கையடைந்து கண்ணபிரானிடம் தான்வந்தவரலாறுகளை வருத்து ரைத்துப் பிராட்டியார் வரைந்துவிடுதத நிருமுகத்தையுங் கைக் கொடுத்தனன். கண்ணனதை யன்போடேற்றுப் படிப்பித்து அடங் கியவையறிந்து அகமகிழ்ந்து அந்தணனோக்கிப் பிராமணேந்த மா நாளையதினம் யான்அங்குவந்து யாவர்தடுப்பினும அமமங்கை யை மணம்புரிவேன். இச்சங்கதியை நீ முன்சென்று அவட்கு அறிவி என்று அனுப்பினன். புரோகிதர் சென்றனரோ நமக்கென னவென்று நடந்துவிடடனரோ அவர்தான் போய்ச் சொல்லினும் கண்ணன் நம்மை ஓர்பொருட்டாய் எண்ணிவருமோ தவிர்ந்திடுமோ என்று வருந்தியிருந்த பிராட்டியாரிடம் அந்தணன்வந்து கண்ணன் கூறியவற்றைச் சொல்லுதலும், பிராட்டியாகேட்டுப்பெருமகிழ்ச் சியுற்றவ் வேதியர்க்கு வேண்டுவன வெறுப்பலகி கண்ணன் எப் போது வருமோவென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். முன் உருக்குமின் அனுப்பிய தூதுவர் விரைந்து சேதிபராசன்மகன்சிசு பாலனிடம் சென்று உருக்குமின் தங்கவோலியினைத்தருதலும் அ தைப்படிப்பித்து அறிந்து பெருமகிழ்ச்சியடைந்து உடனே சிசு பாலன் நால்வகைச்சேனையும புடைசூழக் குண்டினபுரம அடைந் தனன். தந்தவக்கிரன், சாலுவன், மகதராசன், சராசந்தன், சேதி பன், பவுண்டரன் முதலியவர்களும உடன்வந்தனர். இவர்களெல் லாரையும் உருக்குமின் என்பவன் எதிர்கொண்டழைத்து மண்ட பத்திருத்தி அர்க்கியாசமனாதியுபசாரங்கள் செய்ய மகிழ்ந்திருந்த னர். பின்சிசுபாலன் மணக்கோலங் கொண்டதறிந்து உருக்குமின் உட்சென்று தன்றமையையழைத்துத் தங்கையை மணக்கோலஞ்செய் து அழைத்து வரும்படிசொல்ல அத்திச்சொல்லில் விருப்பமற்ற வன்னீயானவள் தன்மடந்தையிருக்கும் இடத்தை யடைந்தனள். அக்காலையிற்பிராட்டியார் கண்ணனின்னும் வரவில்லையேயென்று மனம்வருந்துபவர், சேதிபன்மகன் சிசுபாலன் வந்தானென்பது கேட்டு விடந்தலைக்கொண்டாற்போலப் பெருவேதனைப்பட் டிருப்ப தைக்கண்டு விதர்ப்பன்மனைவி தன்மகளையழைத்துக் கண்ணீரவிட் டுத் தன்மகனைவைது பிராட்டியாரை நோக்கிப் பெண்ணே வருந் தாதே கண்ணன்வந்து மணம்புணரும் என்று கூறி, அம்பிகையா னவள் இந்த மாநகர்தனில் சிந்தையினினைத்த வரங்களை நினைத்த படி நினைக்குமுன்கொடுப்பவள் அவளைச்சென்று நீ வணங்கி வரம்

மேண்டினுல் உடனே கண்ணன்றேர்மீது வருமு என்றுரைத்துத் தேற்றினுள. உடனே பிராட்டியார் அவ்வாறே பகவதியின் கோயி டைந்து தொழுது வரங்கேட்க விரும்புதலும் அன்னமகிழ்ந்து நீராடிக் கலிபுனைந்து கலன்கள ணிந்து வழிபாட்டிற்கு வேண்டுவன வற்றை எடுப்பித்துக்கொண்டு கிவிகையிடைச் சீயுடனே பகவதி கோயிலடைந்தனள். கோயில்சென்றதாயும் தனயளும் விதிமுறை யின்படி பகவதியை வழிபட்டுக் கருதியவரம் வேண்டிநிற்குங்காலை யில் கண்ணன்தேரினின்றும் இழிந்து பாதசாரியாக வருவதுகண்டு பிராட்டியார் பெருமகிழ்ச்சியுற விதர்ப்பன் மணிவிகண்டு கண்ண னென்றறிந்து "யாதவகுமரா, உன்னையல்லாமல் ஒன்றையும் என் மகள் உள்ளத்தில் உபாவாகவுன்னியறியாள் நீயிவட் நாயகன் நீயிவளை நாயகியாகக்கொண்டு வாழ்த்தி எல்உயிரனையாளாகிய விவளைக்காக்குதி," என்றுரைத்துப் பிராட்டியாரைப் பிடித் துக்கண்ணன் கையிலிநதாள. உடனே பிராட்டியார் தன்கா விடைப்பணியக் கண்ணன் கவிப்படைந்து எடுதகணத்துப் பிராட் டியாருடன் தேரேறினன். அதுகண்டு தூதுவர் விரைந்தோடிமண் டபத்தினிடத்துச் சிசுபாலனும் மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் உருக்குமினடிபணிநது அஞ்சலிசெய்து பிராட்டியாரைக் கண்ணன் தேரின்மீது எடுத்துவைததுச் செல்கின்றனென்று சொல்லக் கேட்டு, எழுந்துநின்று மிகவெகுண்டு, யாவர் காகினும் யாதவன் றணை இன்று வென்று வடிவுமிகுத்தவருக்குமினியை மீட்டுவரே னேயாயின் அவ்விடையனுகிய வவ்வியிகுலத்து யாதவனுக்கு அடி மையாவேன் என்றதிறுதியாகிய சபதங்களைசசொல்லினன். அது கேட்டு சராசந்தன் "எனக்குப் பன்முறையுக் தோற்றோடிக்கடன டுவைத் தனக்கிடமாகக்கொண்ட இழிதகையானைக் கடிந்து நான் இன்று சிறைவைப்பே" னென்றன், அதுகேட்டுத்தந்தவக்கிரன் மூனிந்து "கந்நன்மைந்தனை நான் தனியாகவே முந்திவெல்வே" னென்றன். இவ்வாறே சாலுவன் பவுண்டரன், சேதிபன் என்ப வர்களும் தனித்தனி நான்தொலைப்பேன், நான் வெல்வேனென் றுரைக்க, உடனே போருக்காயத்தமாய் உருக்குமின் எழுந்தனன். எழுந்து தன்முன்னின்ற சேனுவீரர்களை நோக்கி, மதியேதுமிலா தஇடையன் எங்கையைக்கொண்டு செல்லுவதன் முன்படையோடு சென்று தடுமின்என்றுரைக்கக்கேட்டு உடனே னால்வகைச் சேனை ளுங்கூடியார்த்தெழுந்து சென்றனர். உருக்குமியும் சேதிபதியை சூழ்ந்துவர ஆரவாரித்துக் கொண்டுவந்தனன். உருக்குமியு சேனுவீரர்கள் கண்ணனையடைந்து உருக்குமினியைவிட்டுச்

செல்லென்றுகூறி எதிர்ததுப போருகுத தொடங்குதலும, க
ணன் குறுநகைபுரிநது விலவீரதது யாவரும அஞ்சுமபடி நாலை
லியெழுபபி அமபெப்தலும வீராகள பலதிசைநது வீழவதுகண்
ஒருவாபின் ஒருவராக வநதெதிர்த்த பலராமன், சாலுவன, தந்த
வகிரன, மதராசன், சிசுபாலன இவாகளையுந தோற்றோடச்செ
தனா. உடனே உருசகுமின வெகுண்டு சேனைசூழசெனறு கண்
ணனை பெதிர்ததுபபலவம புரிபெபயர சணணனும விலவீரத
துச சிறசிலவமபுக ளெயது உருக்குமினுடைய வமபபடியும
விலலுநதேரும குதிரைகளும சவசமும அழிதது அவன் மாபி
னுப் ஊருவசெபப ஒடலெஙகும குருதிபெருகமெமிக்க, உரு
குமின மெலிநது தேரினமீ நது மூசசிசசுவீழநதான் அது ணறி
வருநதிய உருசகுமிணியைநோகி பாவாய இவனுகுபின போயி
லதுஉயிரபிழைபபான எனறுகூறித தனஅணிநெடுந்தேரையோட
டியவணினறும அசனறுசெனறனா. அபபோது பலராமா தேரே
றியெதிர வரகணடகணணன பிராடடியோடு அவனடி பணிநதே
ரேறி மகிழநதுசெனறார பின சிறிதுநேரம சென்று உருகுமின
மூசசைதெளிநது மாடுமேயநதவன சமயமபாரது ஓடினன.
போகுமுன தடுபபேனெனறு சொலலிவரசிசுபாலனமுதலிஞர
களும சூழநதுவநது எதிர்தாகள. அதுகணடு பலராமன எதிர்த
துசசெனறுஅவாகளெயெலலாம பினவாஙகிபோடசசெயது அடாந
துவநத உருகுமிணபபறறி வாயிறகுருதிசோரநெருகக மாபில
டிதது தலதிருசபபோரு தருணதில பிராடடியாகணடு கண
ணினீரவாரவருதி அசசுறனடி பணிநது "வசுதேவனருணமைநத,
என்முனனெனை மடிவகனமுன விரைநதுசெனறு பலராமரைவிலக்
கியருளுக," எனவேணடினர உடனே கண்ணனும விரைநது
சென்று "அரிபயனிநதிர்ன கடலஎழுநத விடமுணடசிவன என்
பவாகளும உனனெடுதிர்த தமராறறாகள அதுபோலமாக சில
மொரு சிறிதுமிலாத விபபாலனெயோ நீ முனிதி! சிலகளு
சிறுநரியோடெதிர்கெருமா? இவனெயுய்யவிவருள" எனறு வேணடு
தலும பலராமரும அதறகியனெ விடுதிதனா. அதுகணடு தேவாகள
நகைதது மலாமழைபொழிந்தனர். உயிர தபபியோடிய உருகுமி
னியும தேரேறிக கண்ணனை நோக்கிச செலலாதே எனவுரைத்
துக கண்ணனது தேரின பாகன்மீதும, பரிகளினமீதும அமபினை
யெய்ய கண்ணனும குறுநகைசெயது விலவீரத்து அமபு எய்
உருக்குமின் தேரும விலலும சிதைநது வீழசெயதனா. உடனே
உருக்குமின் கடகமெடுதது கடுகெனவருதலும கண்ணன்

ல் அதைப்பொடி படுத்தினன். அது பொடிபடவும் உருக்குமின்
ற்போர் புரிவேனென்று பரந்தாமன் றேரினிடைத்தாவிக்கண்ண
ரக்கட்டிப் பிடித்ததலும் அச்சுதன்கண்மி இவன்வீரம் நன்றுஎன்று
புவனைப்பிடித்து இருகைகளையும் வாரினுலே தேர்க்காலிற்கட்டி
புவன் சிகையை யுலகோர்கண்டு நகைக்கும்படி ஐந்துபாகமாச்
றைப்பித்துப் பிராட்டியைநோக்கி மின்னுகின்ற வாள்போலும்
ிளங்குகின்ற விழியாளே, விதர்ப்பமன்னன்மகளே உன்முன்னவ
ன்து வீரத்தைப்பார் என்றுநகைத்தனன். உருக்குமின் பாரின்மீது
ங்கமுற்றுத் தலையிற் சிகையைத்துகொண்டு தங்கைநாணுமாறுதிற்
றலைக்கண்டு பலராமர்விரைந்துவந்து கண்ணனைநோக்கி "தம்பிகயி
றுகொண்டவனைக் கட்டியதன்றி உன்னுயிரன்னளாது உடன்பிறந்
தானென்று சிறிதும்நினையாமல் தலைமயிரையும ஐந்துபங்குறச்
சிறைப்பித்தனையே! துட்டனுயினும் துன்மதியுடையோனுயினும்
நமக்குக்கட்டத்தைக் கொடுப்போனுயினும் உனது சுற்புடையமனை
யியாகிய வட்டமாமதிபோல் விளங்கு முகத்தையுடைய உருக்குமி
ணிக்காக அவனைவிட்டு நமதுநகர்க்குச்செல்வதே நன்" றென்று
சொல்லியவன் கட்டறுத்து ஐஞ்சிகையை யொருசிகையாக்கி அன்
போடி அவனைநோக்கி உன்மைத்துனன்விளையாட்டாகச்செய்ததை
மனங்கொள்ளேலென்று தேற்றி அனுப்புதலும், நாணமிழந்த
உருக்குமியும் கண்டோர் நகைப்பரேயென்று தான்முன்னுரைத்த
சபதத்தை நினைந்து குண்டினபுரம் செல்லாமல் காட்டகத்துள்போ
சகடம் என்னும் நகரத்தில் தன்வீரங்குறைந்து தங்கினன். உருக்
குமினுடைந்தோடலும உம்பா மலர்மழை பொழியக் கண்ணன்
திருவுடன்தேரேறி வழியகத்துள்ள வாப்பங்களை வாள்விழி மங்
கைகக்கு வகுத்துரைத்துக்கொண்டே துவாரகையடைந்து தேரி
னின்று மிறங்கி யந்தணர் அருமறையோத வழகிய திருக்கோவி
டைந்து அரிவையர் திலகமாகிய பிராட்டியாருடன் தந்தையாகிய
வசுதேவரை வணங்கினன். அதுகண்ட வசுதேவரும ஆனந்தக்கண்
ணீர் பொழிதர மைந்தனை யெடுத்தணைத்து மகிழ்ந்தனர். பின்கண்
ணன் திருவொடுங்தேவகி யடிபணிசப்பணிய அன்பொடு மைந்தனை
யும் மருகியையும் மலர்க்கையாலெடுத்து மார்போடணைத்து
மகிழ்வுற்றனள். அவ்வாறு தேவகிமுதலிய தாய்மார்கள் தாள்
பணிந்து மகிழ்ச்சியூட்டி மன்னவர் மறையவர் மாதவர் மகிழ்ந்தினி
திருப்ப மண்டபமதனில் வீற்றிருந்தனன். அரசனுகிய உக்கிரசே
னனும், அக்குரூரனும், உத்தவனும் அமைச்சர்களும் கண்ணனை
யும் கமலத்திருவையும் களிகூரக்கண்டனர். அந்தணர் ஆசிவழங்

கினர். அரிவையர் கருப்புரதீபமேந்தினர். தேவர்கள் பூமழை
ழிந்தனர். அக்காலையில் வசுதேவன் கர்க்கணோக்கி மாயவனு
மலர்மகளும் மணம்புணரக் குற்றமற்ற மூகூர்த்தம் விரைந்து செ
புகனென்றலும் சர்க்க மாதவன் மகிழ்ந்து காணியாகிய கண்ண
காமலமலர் மங்கையை மணத்தலுக்கு நானே நன்னனென வுரை
தனன். அதுகேட்டு வசுதேவர் மனமகிழ்ந்து அத்தினபுரத்திலுள்ள
தருமனுக்கு மவன் சுற்றத்தார்க்கும் வியாசமுனிவர்க்கும் நந்
னுக்கும் சோதைக்கும் மற்றிடங்களிலுள்ள கொற்றவர்க்கு ம
வோலேபோக்கினர். மணவோலைகண்
மன்னவர்களெல்லா மனமி
மகிழ்ந்து துவரையம்பதி யடைதலும் அதன்முன்பே நீகரத்தை
அணிபெறச்சிங்காரித்துப் பின்குறித்தகாலத்திலே கர்க்கனிருந்
ஓமாதிகள் விதிவழிப்படிநடத்த மாதவன் மலர்மங்கையை மணா
புணர்ந்து தந்தைதாயர் தாள்களினும மற்றுள பெரியோர்பாதங்
களினும் வணங்கி மற்றவர்களை வாழ்த்தி ஊர்செல்வார்க்கு விடை
தந்து உருக்குமிணிபிராட்டியாருடன் கூடி உவந்தினிதிருந்தனன்

இப்படி நிகழுநாளில் ஓர்நாள் கண்ணன் இராஜசபையில் வீ
றிருக்கும்போது சத்திராசித்து மன்னன்தான் கதிரவனைநோக்கித்
தவம்புரிந்துபெற்ற எண்கலப்பொன்னை யீனும் சமந்தக மணியை
மார்பிடையணிந்து வரக்கண்ணன்கண்டு இமமணியினை உக்கிரசே
னனுக்குக் கொடுவென்றுகூற இசையாதுசென்றனன். பின்சிலநாட்
சென்று சத்திராசித்துமன்னன் தன்தம்பி பிரசேனனை அச்சமா
தகமணி மார்பிலணிந்து குதிரையேறிச செல்லுமாறு வேட்டைக
குவிடுக்கக் காட்டில் அவனை ஓர்சிங்கமதொன்று மணியைக் கவ்விச்
செல்ல அதுகண்டு கரடியரசன் சாம்புவன் அச்சிங்கத்தைக்கொன்
று மணியைக்கொண்டு சென்று தன்மகள் சாம்புவதிக்கு மார்பில
ணியும் பொருட்டுதந்தனன். பின் மற்றவர்களுடன் தன்தம்பி
மீளாமைகண்டு சத்திராசித்து மன்னன்வருந்தி மாதவன்கேட்ட
போதே மணியைக்கொடாமையால் தம்பியைவதைத்து மணிகவர்
தான்என்று அழுவதுகேட்டுக் கண்ணன் கடுகென்சென்று
நடந்தவையறிந்து சாம்புவனுடன்சமர்செய்து அவன்தன்னை மாய்
வனென்றறிந்துவணங்க அவன்விருப்பத்தின்படி அவனை வைகுண்
டத்திற்கேற்றி அவன்மகள் சாம்புவதியை அழைத்துக்கொண்டு த
வாரகையடைந்து சத்திராசித்துவுக்குநடந்தவண்ணமுரைத்துமண
யையிரந்து அரண்மனையடைந்து சாம்புவதியை விதிப்படி மணந்து
மகிழ்ந்திருந்தனன். பின் சத்திராசித்து மன்னன் தன்தம்பியிறந்

வாறறிந்து வீணே கண்ணன்மீது பழிசுமத்தினோமே யென்றுவருந்தி கண்ணனிடம்சென்று உனக்கு என்மகள் சத்தியபாமையைத் தரவிரும்புகின்றேனென்னலும் கண்ணன்விரும்பவதேவர் சத்திராசித்துவைநோக்கி உன்மகளை என்மகனுக்குத் தருதனனென்ன உடனே நாணிச்சயித்து விதிப்படி விவாகம்முடித்தக் கண்ணன்பார் மடந்தையாகிய சத்திபபாமையை மனைசெது பகிழ்ந்திருந்தனன். இவ்வாறிருக்கையில் நிருதராட்டிரனுல் அநுப்பப்பட்டு அத்தினபுரத்திருந்து வந்ததூதுவர், வாரணகியில் ஐவரும் அன்னையுடன் அரக்குமாளிகையில் எரிந்திறந்தொழிந்தார்கள் என்று கூறக்கேட்டடனே அத்தினபுரியடைந்து அரவக்கொடியோன் முதலியவர்கள் பாண்டவர்கள் இறந்தொழிந்தார்களென்று அதைத்து மகிழ்சசியுற்றிருப்பினும் புறத்துக்கால் கொள்ளாக்கவலை யுவிடைக்கொண்டார் போலத்தழுவியழ ஐவரும் அரிந்றியுபாத்திருத்தலை அறிந்துள்ளோனுதலின் தானும் கபடமாகவே தழுவி அழுது இறந்தோர்க்குச்செய்யும் கிரியைகளை ஐவர்க்குச்செய்வித்து வீற்றிருந்தான். அதுசமயத்தில் அக்குரூரன் சததனுவாவைபபார்த்து அன்பனே நீயும் கிருதவன்மாவும் இருபவரும் சத்திராசித்து மன்னன் தன்மகளைக்கண்ணனுக்கே தந்துவிட்டானே, அத்தியோனைக்கொன்று அவனிடத்துள்ள சமந்தகமணியைக்கொண்டு தருவாயாகில் நலமென்றுரைக்கச் சததனுவாவும் இணங்கி இரவிடைசென்று கன்னமிட்டுப்புகுந்து ஆண்டுறங்குகின்ற சதாராசித்துவைக்கொன்று மணிகவர்ந்து மனையிடைசென்றனன். பின் சதத்தியபாமை இஃதுணர்ந்து தன்னத்தன் இறந்தமைக்கு இரங்கி என்தந்தையைக்கொன்றனை என்கொழுநனுல் கொல்விப்பேனென்று கட்டுரைத்து அதைதிப்பதியடைந்து அன்பனிடம் உரைக்கக்கேட்டு அரிவையைத் தழுவியழுது துவாரகையடைந்தனன்.

உடனே சததனுவா அக்குரூரனைநோக்கிக் கண்ணன்கடித்து வந்திருக்கின்றனனே, செய்யுமாறு யாதென்ன, அக்குரூரன் சததனுவாவைநோக்கி நீ ஏன் சத்திராசித்துவைக்கொன்றனை உடனே கண்காணாது செல்எனக்கேட்டு அச்சமந்தகத்தை அக்குரூரனிடம் கொடுத்துவிட்டு குதிரையேறி விரைந்துசென்றனன். பின் சதாஜித்ராசித்துவைக்கொன்றுன் சததனுவா என்றுணர்ந்து கண்ணன்பால் வண்ணனுடன் தேரேறித் தொடர்ந்துசெல்ல மிதிலையை அடுத்த சோலையிடத்தில் எறியகுதிரை இறந்துவிழ காலிற்காற்றுகப்பறத்தலும் கண்ணனும் தேரிழிந்து குரத்தி கையாழியாலவன் கழுத்தரிந்து அவனிடத்து மணிகாணுதுதிரும்பி மலிகாலைனென்று

அலாயுதனுடன்கூற அவன்அதில் ஐயுற்றுக் கண்ணனீராக்கிசத்
திராசித்துவின் மணிக்குரியான் நீயேயன்றியானன்று. மணிகாணு
விட்டால் மகிழ்வுடனின்னூர்க்குச் செல்லென்று மிதிலையிற்போத
லும் கண்ணன்கண்டு வேறுரிடமாவது அம்மணிகண்ட பின்ஞயி
ணும் ஊர்வந்துசேர்கஎன்று துவரையடைந்து சத்திராசித்துவை
பெரியிடையிட்டு யிருபுனற்கிரியையும் செய்வித்து ஏந்திழை இன்
பம்துடைத்தினிதிருக்கையில் அக்குரூரன் அம்மணிகொண்டு அஞ்
சிக்காசியடைந்து வேள்வியுரிந்து தானமீந்திருப்பதறிந்து அச்ச
மின்றி ஊர்வருமாறு அன்பரிடம்கூறியனுப்ப அவனும் உடன்வந்
துபணிந்துமணியையீய அதைஅவனிடம் கொடுத்தனன். பின்மிதி
லையிற்சென்ற பலராமன் வெகுலாசுவ மன்னவனுல் எதிர்கொண்ட
ழைக்கப்பெற்று மகிழ்வுடனிருந்து தான்பயந்த பானுமதிப்பெண்
ணீப்பாம்புக்கொடியோனுக்குப் பரிவுடனுதவிக்களித்திருப்பவன்,
இவற்றையெல்லாங் கேள்வியுற்றுத் துவரையடைய அக்குரூரன்
அம்மணியை அலாயுதனிடம்கொடுப்ப அவன்அதைசத்தியபாமைக்
குக்கொடுத்தான். பின்கண்ணபிரான், உருக்குமிணி, சாம்புவதி,
சத்தியபாமை இவர்கள் தன்னைச்சூழ்ந்திருக்க மகிழ்ந்தினிதிருந்த
னன். முன் அரக்குமாளிகையில் இறவாது உயிர்தப்பிய பாண்ட
வர்கள் துரோபதை சுயம்வரத்தில் வெளிப்பட்டுப்பார்த்தன் ஒருவ
ராலுமியலாத வில்லவளைத்துக் கயலேயெய்ய அன்னையுரையின்படி
துரோபதையை யைவருமமணந்து அத்தினபுரியடைந்து பெரிய
தந்தை உத்திரவின்படி இந்திரப்பிரத்தம் சேர்ந்தவுடன் தருமன்
தன்வரலாறுகளைச்சொல்லித் தூதேவக் கண்ணனிந்து சாத்தகி
யுடன் தேரேறி இந்திரப்பிரத்தமடைந்து பெரியோர்களையும் சிறி
யோர்களையும்வணங்கியும் வாழ்த்தியும் அளவளாவிப்பின் பார்த்த
னுடன் சோலையடைந்துகளித்திருக்கையில்அருச்சுனனிடைஅனற்
கடவுள் அந்தணவடிவங் கொண்டடைந்து விரும்பியபடி அவன்
அரும்பசிதணிக்கக் காண்டாவனமுதவி ஈண்டமுகில்தமித்துநின்று
காண்டீபவில்லும் கவனமான்றேரும்கொடியும் கனற்கடவுள்தரவும்
அவ்வெரியிடைத்தப்பிய மயனுல் நீரெனப்பளிங்கும் பளிங்கென
நீரும்தோன்றும் பெருமண்டபம் நிருமிக்கவும்பெற்றுமகிழ்ந்தபின்
விசயனுடன் தேரேறி காட்டிடைவேட்டைவிரும்பிச்சென்றுவேட்
டையாடி நீர்குடைந்து இருப்பவன் சோலையுள் அருச்சுனனுல் கா
ளிந்திதவம்புரிவதறிந்து அவள்முன்னின்று அவள்வேண்டுதலுக்
கிசைந்து தேரேற்றி இந்திரப்பிரத்தமடைந்து வேதவிதிப்படி
கார்த்தகினெய்நி ழுமாதிகள்செய்யக் காளிந்தியை மணம்புணர்ந்து சில

நாள அங்கிருந்து பாண்டவர்களிடம் விடைபெற்றுத் துவரையடைந் துதாய்தந்தைய ரடிபணிந்து தேவியர்தற்சூழ மகிழ்ந்தினிதிருந் தனன்.

பின் கண்ணபிரான் அவந்திமன்னன் மகள் மித்திரவிந்தை சுயம்வரமென்று அம்மன்னவன்விடுத்த தூதுவரால்அறிந்து அங்கு சென்று அவ்வரிவையங் குற்றவர்களைப்பார்த்துவந்து தன்கழுத் தின்மாலையிட அதுகண்டு அரசர்கள் ஆற்றுதுபோருக்கெழ அவர் களைத்தோற்றோடச்செய்து அமமித்திரவிந்தையை மணந்துஅவள் தந்தைகொடுத்த அரும்பொருள்களைப்பெற்றுத் துவாரகையடைந் தான். பின்கவுசலராசன் தான்பெற்ற நாக்கினசித்து என்னும் பெண்ணை தன்னகரத்துள்ள ஏழுவிடைகளையும் ஒருசேரத் தழு வுவோனுக்கு மணம்புணர்த்துவேனென்று முரசதைவித்ததுகேட் டுஆண்டடைந்து அக்கவுசலமன்னன்விடுத்த ஏழுவிடைகளும் தம் மிடம் வருவாரைச் சினந்துநோக்கி இடிபெனவதிர்த்துக்கோட்டாற் பாயவருவதுகண்டு அரசாகளெல்லாம ஓடிஞராகக் கண்ணன் ஏழு ருவங்கொண்டு ஒருகணத்தில் அவ்வெழுவிடைகளை வாலைப்பற்றிச் சுற்றிக்கொன்று நாக்கினசித்தால் மாலைசூட்டப்பெற்று மண்டபம டைந்து விதிவழி மணம்புணர்ந்து நாக்கினசித்துடன் தேரேறிவழி யில்தடுத்த அரசர்களை அருச்சுனன் முறியடிக்கமகிழ்ந்து துவரை யடைந்தனன். பின் சுரதகீர்த்திமன் பெற்றபத்திரை கண்ணன்மீது காதல்கொண்டு அவன் வரலாறுகளை வீணையினிசைத்துப்பாடி அ வன்வடிவத்தை அழகுபெறஎழுதி அதுமுன்னிலையாகசிற்சிலபேசி அயருங்காலையில் ஆண்டடைந்து அவன்விரும்பியபடி அவளைத்தே ரேற்றித்துவரையடைந்து விதிவழிப்படி மணம்புணர்ந்தனன். பின் பத்திரராசன்மகன் பிரகசேனன் என்பான்பெற்ற இலக்கணையென் பாள் இயல்புறு புராண சாத்திரங்களெல்லாம் எழில்பெறக்கற்று கண்ணன் கழலிணைநினைந்து அவனைமணம்புணரக்கருதி வருந்தி யிருந்தாளாக அம்மன்னவன் தூயதனுவேள்வித்தியலுமச்சம் வீழ்த் தாருக்கென்மகளை மணம் புணர்ப்பேனென்று முரசறைவிப்பது அறிந்து ஆண்டடைந்து வீரரென் விசயனங்கர்கோன் சேதிபன், முதலினோர் எய்துவீழ்த்தொணாது நின்றகயலைவீழ்த்தி இலக்கணை யை மணம்புணர்ந்து அம்மன்னவன் ஈந்தபொருள்களுடன் துவரை யையடைந்து தேவியர்தற்சூழ மகிழ்ந்தினிது வீற்றிருந்தனன். பின் நரகாசுரனால் சிறையிடப்பட்ட பார்த்திபர் பதினாயிரவரும் தங்களைச் சிறைமீக்கி ஆட்கொள்ளுமாறு வேண்டித் தூதேவுதலும்

அவர்கள் துன்பமகீக்குவதுகருதிச சத்தியபாமையுடன் கலுழன் மீதிவர்நதுசெனறு நரகாசுரனது ஏழுவகைமதிலும பழுதுபடச செய்து முரன்முதலிய படைதலைவரைகொனறு எதிர்தது நரகனுயிர தொலைதது பூதேவி வேண்டுகோளிவபடி சேய்கருமுடி சூட்டி நரகனுல் சிறையிடப்பட்ட அரசாகளுடன் அவ்வரசர் மடந தைகளுமம மலாமுகங்கொணடு வணஙகிசசூழக் கண்ணன் கலுழன் மீதேறிச சதயிபாமையுடன் துவரையடைநது பதினுருயிரமண் டபங்களில் ஏகமுகூறததில் பதினுருயிரமபெயரையும நூன்மு றைப்படிமணநது மகிழ்நதிருந்தான். இஙனநிகழுநாள்களுள் ஓர் நாள் கண்ணன உருகுமிணிப்பிராடடியாரைநோககி, மீதே, சே திபன்முதலியபேரரசாகள நின்னை விருமபியிருநதாகளாக நீஅவா கனைவிடதது என்னைவிருமபியடைநதமை எனனபேதமை? இனி யாயினும உன்னை நிறகொத்த மனனவனை யடையெனபபரிகாசமா கக்கூற அருகேடுச சகிகலாற்றாது வருநதிய பிராட்டியாரைத் தழுவிததேற்றியிருகையில நாரத முனிவரவரது ஆசிவழங்கக்கண் ணனளுநது பிராடடியுடன்வணஙகிச செயதறகு முபசாரமனைத் தமியற்றிஇருகக முனிவா கண்ணனிடம ஓ பாரிசாதமலரைததர அதைப பரந்தாமன பிராடடியாரிட ம கொடுதததும அதை அவா வாங்கி முடியிடைச சூடடிக்கொள்ளுகையில முனிவாபிராட்டியை நோக்கிபபெண்ணே, இபபுடபம நின்முடியேற நெடுநதவமசெய்த துபோலும. உனககு அஃதோபொருடடோ என்றுகூறிச சேதர னிடம விடைகொணடுசென்றுசதயபாமையின் மனைபபடையடை நதுஅவனை நோக்கிப்பெண்ணேகணணன் யாவரினும் நின்னிடையன் புடையோன்போனடிப்பினும உருக்குமனியிடதேதான் அதிகப் பிரியமுடையனு யிருக்கின்றனன் இனறுதான் தநத அரிய பாரிசா தமலரையும அவளுகதறறுன் சூடடினன் என்றுரைத்துசசென் றனர். பின்சதயிபாமை பெரிதுமவருநதி யிருநதகாலையில்கண் ணன் ஆண்டடைந்து அமளியின் மிசையடைநது அரிவையைதத முவலும அவள்சீறிப, பொய்யை மெய்போலக்கூறி ஆயப்பெண் கனை அணையும ஆழிக்கையாகின் மாயமாங்கலவி விருமபிலேன் நீ இவண்நீங்குவாயாக என்னலும நாரதமுனிவனவின்ற கலகசசொல் லாற்கலங்காதே வானுலகதது்ள்ள பாரிசாதவிருகூதையே நின் முன்றிலிற் பதிபபேனென்றுதேற்றியணைநது மற்றைநாட்கருடன் மீதிவர்நது பொன்னுலகததெய்தி இந்திரன்சபையிற் கண்ணன் அவனுற்பூசிக்கபபடடிருக்கையில் இந்திராணியாற்பூசிக்கப்பட்டு அ வளிடம இருநத சதயிபாமையைச சசிபாதது நாபிருவரும்

சூழ்தாடுவோம். நான் சூதிற்றோற்றால் உனக்குப் பாரிசாத மலரீவ னென்ன சத்தியவாமை நான்தோற்கிற் சமந்தகமணியை யீவ னென்றான். பின் இருவரு மசூதாட சத்தியவாமை வென்று பாரி சாதமலரைப்பறிக்க விடுத்த மடந்தையரை அம்மலர்காக்குந் தெய் வப்பெண்கள் வெருட்டியோட்டலும் முனிந்து கண்ணனைஅழைத் துவணங்கி நடந்தவற்றைக் கூறக்கண்ணன் கடிதிற்சென்று பாரிசா தத்தை வேரோடுமாடுங்கி கழுமுன்மீதுவைத்துக்கொண்டு சத்தி யவாமையுடன் பெயர்ந்திவருகண்டு தடுத்த தேவர்கள் தோற் றோட்செய்து துவரையடைந்து பெரியோராகளை வணங்கி சத்திய வாமையின் முன்நிலைப் பாரிசாதத்தைப்பதித்து மகிழ்ந்திருந்தனன்.

இந்திரப்பிரத்தத்தில் தருமனிருந்து அரசாண்டிவரும நாள் களுள் ஓர்நாள் பிராமணர் பசுக்களை வேடர்கவர்ந்தாரென்று பார்த் தன்கேட்டு அதைஉரைசெய்யத் தருமனிடம்சென்று அவனுடன் ஓராசனத்திருக்கும ஞரோபதையைக்கண்டு முன்வியாசரால் ஏற் பட்ட நியமனத்தின்படி தீர்த்தயாத்திரைசெய்து வருபவன் உரக லோகத்தெய்தி ஊகியைமணந்து மதுரைப்பயடைந்து பாண்டி யன் பாவைசித்திராங்கதியை மணந்து மதுரைநீங்கி முக்கோல் கொண்டு நான்மறையோனுக்குப் பன்னிருநாமம பண்புடன்றரித்து காவியுடுத்து வைணவத்துறவிபோல் வேடமபூண்டு துவரைப்பதி யுட் புகுதல்கண்டு பலராமன் பங்கயநாபனுடன் சென்றடிவணங்கி அழைத்து சுபத்திரையிருக்குமிட த்து இருத்திஇண்டெங்கை சுயம் பாகஞ்செய்யன்ன நீயருந்திபருள் என்றுகூறி விடைபெற்றுச்செல் லலும் ஆசனத்தின்மீது பெருந்துறவிபோலிருந்தனன். அக்கபட சன்னியாசியைச் சுபத்திரையடைந்து வணங்குதலும எழில் கண் டாற்றுதவனுப் காமனமபால்போவது வருவதாயிருந்த ஆவியுடன் ஆசிவழங்கி யிருந்தவனுடன் உரையாடிச் சுபத்திரை அவன்பார்த் தனென்றுணர்ந்து நாணி உட்சென்று மையல்தலைக்கொண்டு வருந் தினள். அதுகாலையில் பிரபாசப் பேர்நதியின் மேகஞ்சொரிதலும் புனிதரோட மாயவன், அலாயுதன் தந்தை தாயினர்முதலினோர் எல் லவரும் அவ்வாற்றின் சலத்திடை ச் சென்றனர். அற்றை நாண்மா லைகுறுகுதலும பார்த்தனும் சுபத்திரையு மையல் தலைக்கொண்டு வருந்தாநிற்க உடனே கண்ணன்அடைந்து அருச்சுனனைத் தழுவி எங்கையைநினக்குத் தருவனென்றசொல்லி நினைக்குமுன் அமரர் கணம்புடைசூழ இந்திரன் வருதலும் தவமியன்அடைந்து விதி வழிப்படி ஓமாதிகள் செய்யச் சுபத்திரையைப் பார்த்தனுக்குமண

முடிப்பித்துச் சிதனப்பொருள்கள் பலவுந்தந்து பார்த்தனை வீடிந்த பின் ஊர்போகுமாறு உரைத்து பிரபாசக்கரைக்குச் சென்றிருந்தனன். பார்த்தன் அற்றையிரவிற் சுபத்திரையுடன் கூடியிருந்துமற்றைநாட்காலையில் தேரேறிச் செல்லத்தடித்த படைவீரர்கள்பின் பின்வாங்கச்செய்யத் தாதுவரோடிநடந்தது இன்னதென்று அலாயுதனுடன் கூறுதலு மவன்வெருண் டெழுதலும் கண்ணன் தடுக்கத் தணிவெய்தினன். பின்பார்த்தன் தேரைச் செலுத்திக் கொண்டு இந்திரைப் பிரத்த மடைந்து சுபத்திரையுடன் பெரியோரை வணங்கி யினிதிருந்தனன். பின் சூரியகிரணம் சம்பவிக்க அலாயுதனும் கண்ணனும் தேவியரும் தம் தந்தையரும் சூழ்ந்து தீர்த்தமாடுவது கருதிச் சமந்த பஞ்சகம் சென்றார்கள். அரவக் கொடியோன் முதலிஞ்ஞருமை ஐவரும் அவர், அன்னையும் பாரியரும் நந்தனும் அசோதையும் அணுக ஒருவரோடொருவர் அளவளாவியிருக்கத் துரோபதை கண்ணன் தேவியரை நோக்கி நீவிர் கண்ணனை மணந்தவரலாறுகூறுமின் என அவர்கள் எண்ணிரண்டாயிரத்து நூற்றெட்டுப்பெயரும் தாந்தாம கண்ணனை மணந்த வரலாறு கூறக் கேட்டுத் துரோபதை உளங்கி சித்திராங்கணாபிவர்கள் மகிழ்ந்தினிதுற்றனர். பின்புலத்தியன் அகத்தியன் முதலாமுனிவர் வருவது கண்டு கண்ணன் வணங்கி விடுத்தலும் அவர்கள் அவனை நோக்கி நீயும் சாதாரணர்போல் நடித்திருக்கின்றாய்போலு மெனக் கூறிச் செல்பவர்களைப் பணிந்து வசுதேவன் யான் பலமறுத்துயர்பதம் பெறும் வழி கூறுமின் என நாரதனைகைத்துக் கங்கைக் கரையினுள்ளான் வேறொரு கூவலை விரும்பு மாறு கண்ணனைப் பிள்ளையாகப்பெற்ற இவன் வேறுதவம் விரும்புகின்றானென்றனன். அதுகேட்டு முனிவர்கள் வசுதேவனை நோக்கி உலகத்திற் பிறந்தோர்கள் கழிக்கவேண்டிய கடன்கள் மூன்று. அவைகளாவன முனிவர்கடன், பிதிர்கடன், தேவர்கடன் என்பனவாம். அவ்வற்றுள் அருநூலின்படிப் பிரமசாரியஞ்செய்து முனிவர்கடனையுஞ் சுதர்களைப்பெற்றுப் பிதிர்கடனையும் அகற்றினை. இனி வேள்விசெய்து தேவர்கடனை யகற்றுதியேல் கதியிடைப் புகுதுவையென்றுரைசெய மகிழ்ந்து பணிந்து மாமக நடத்துவது கருதித் தவர்களைவரித்து எழிலிற்பெற்ற சாலியிடை யடைந்து மகத்தினை விதிவழிச்செய்து முடித்து அவபிரதங்குடைந்தாடி அனைவர்க்கு வேண்டுவனதந்து விடுத்து அலாயுதன் முதலியோருடன் துவரையடைந்தனன். பின் கண்ணன் சபாமண்டபத்தில் பிரசேனன் முதலினோர் சூழ்ந்திட வீற்றிருக்கையில் நாரதமுனிவ

னடைந்து நீ யதிகனென்றுரைக்க ஆண்டிருந்த முனிவர்களிதே தென, விளக்குதியென்று கண்ணணைக் கேட்டலும் அவன் நாரத னைக்கொண்டு அதன்றன்மை விளக்கித் தன்பதமடைய விரும்பிய தந்தையைப் பின்னர் என் தாயுடன் அடைகுதி என்றுரைத்து தன் தாய் விரும்பியபடி அவடநயர் அறுவரையும் கொணர்ந்து கொடுத் தனன். பின் தேவகி யவர்களுக்கு தன் இருதனப் பாலி யிய அவர் கள் சாப நீங்கிக் கண்ணன் கழலிடைப் பணிந்து தாயையும் வணங்கி விமானத்தேறி மரீசியிடம் அடைந்து பணிந்தனர். அது கண் ணன் செயலென்றறிந்துதுதித்த வன்னியை பின்னர் என்பதமுறு வென்றவீண்மனத்தை மாயையான் மறைத்தனன்.

பின் தேவியார் புடைசூழ உவந்திருக்கும் கண்ணனை ஓர்நாள் உருக்குமிணி முதலாந் தேவிமார் வணங்கி எங்களுக்குப் புத்திர பாக்கியம் அருளெனக் காலியிலரணி நோக்கித் தவம்புரிந்து வரம் பெற்றுநும் குறை நீக்குவேனென்று அலாயுதன் சாத்தகி முதலி னோரைப் பார்த்துப் பவுண்டரனுல் நிங்குறு வகை நகரைக் காத் திருங்கள் என்றுரைத்து வழிக்கொண்டு செல்பவன் யமுனுநதி மங் காகினியுடனே யமர்ந்திடுங் கூலத்திடை வருதலிக்கண்ட கண்டா கருணன் தான்துதித்திருக்கும் பரந்தாமன் இவனே யென்றுன்னி எதிர்கொண்டு சென்று ஓர் பிராமணப் பிணைத்தை முன் வைத்து நீ இதை அழுது செய்தருள் என்று வேண்ட அவன் தன்மை யறிந்து கோலி முதலிய தீசசெயல்க ளிருப்பினும் தன்னிடத்தில் திடபக்தி யுடையானென்று நினைந்து அவன் வேண்டியபடி அவ னுக்கும் அவன் தமபிக்கும் அரியாபபதவியுதவிக் கயிலை யடைந்து தவம் புரிந்து விடையவன் முன்னின்று வரந்தந்து வணங்கப் பெற் றுத் துவாரகை யடைந்து பெரியோரை வணங்கி இனியோரை வாழ்த்தித் தேவியர்அவாவெலாந்தணிய பதினாயிரத்து நூற்றெட் டுருவாகிக் கூடிக் குலாவி மகிழ்ந்தினி திருந்தனன். பின் சிவபெரு மானை நோக்கி பருந்தவஞ் செய்து பூசித்து அரியுருவம்பெற்ற பவுண்டரன் கவுத்துவ மாலியும கனகாம்பரமும், நாற்கரமும், பஞ் சாயுதமும், கருடவாகனமும் கொண்டு அழகுன்றிரிய நான்கரி லோர்நாள் தனதவைக்கண் வந்த நாரத முனிவனை நோக்கி இவ் வுலகிலுள்ளா ரெல்லாரும் என்னை வாசுதேவ னென்கின்றனர். துவாரகையிலுள்ள இடையனும் வாசுதேவனென்று திரிகின்ற னன். ஆதலால் நீ உடனே இந்திரன் முதலிய இறைவர் உலகங் களிற் சென்று என்னை வாசுதேவனென் றுரைக்குதியென்ன, முனி

வர்பிரான் மீயோனை நோக்கிச் சூரியனை மின்மினி நிகர்க்கில் நீ விந்தை நாயகனை யொப்பாய் என்று கூறுதலும் பவுண்டரன் முனிந்து நீ முனிவனுயினும் இவ்வார்த்தைக் கூறியதற்குக் கொன்றே யிருபபேன் நீ சாபமிடுவாயென்று விட்டேன், எழுந்துபோதியென்றலும் நாரதன் எழுந்து அவணகன்று துவரையடைந்த கண்ணனிடம், பவுண்டரன் சபை யிடை நிகழ்ந்த வற்றைக் கட்டுரைத்தனன். நாரதன் நீங்கு முன்னே பவுண்டரன் ஓர் தூதுவனை யழைத்து நீ துவாரகையிற் சென்று, சீதாம்பரம், பஞ்சாயுதம், வாசுதேவ பெயராகளை விட்டு என்னைச் சரணடைந்துய்தி என்று கண்ணனிடம் சொல் என்று அனுபபினன். அத்தூதுவனும விரைந்து சென்று, துவரையடைந்து பவுண்டரன் கூறிய வற்றைக் கூறுதலும் மாதவன் நகைத்து, நானிவற்றையெல்லாம் விடுகின்றேன் பவுண்டரனை யிங்கு வரச்சொல்லென்று கூறுதலும், தூதுவன் கடிதிற்சென்று பவுண்டரனிடங் கூறக்கேட்டவன் முனிந்து காசிமன்னனுடன் கலவியன் கடிதுசெல்ல, தான் பஞ்சாயுதங் களையுமேந்திக் கருடன் மீதிவர்ந்து நால்வகைச் சேனையும் புடை சூழ்ந்து வரத் துவாரகையடைந்தது கண்டு கண்ணன் தேரேறிச் சென்று சேனைகளை யழித்து சிலபோது வீளையாட்டாகப் போர் புரிந்து ஆழிவிடுத்துப் பவுண்டரன் முடித்தலை துணிக்கக்கண்டு வெகுண்டு வந்த காசிராசன் சிரமறுத்து காசித்தருவிடை விட்டனன். அவ்விருவரும மடிந்தது கண்டு கலவியன் தேரேறி வருவது கண்டு பலராமன் சென்று அலத்தான் மோதித் தேரையழிக்கக் கதைகைக்கொண்டு வருதலும கலப்பையான் மோதியதனையிருகூறுக்க அவன் அஞ்சியோடிக கடலுட்புகுந்து ஒளித்துப்போனன். பின்பால் வண்ணனுடன் பங்கய நாபன் மாதவர்களெல்லாமாகிகள் மொழியவாறோ ஆவலங்கொட்டியார்படக் கோயோர் வாழ்த்ததுவரை யெய்தி யிருந்தனன்.

காசி வீதியிற் காசி மன்னன் தலையுருண்டிட அவன் மகன் சுதக்கணன் அறங்கண்டு இது செய்தான் வாசுதேவனென்றறிந்து அதற்குப் பிரதிசெய்ய விரும்பி அரனை நோக்கித் தவம்புரிய அவன் முன்னின்று கூறியபடி அபிசாரயாகம செய்து அதனுள் பன்னிரண்டு யோசனை நீளமும் பரபபுமுடையதாய் எழுந்த கிருத்தியைத் துவாரகையிற் சென்று கண்ணனைக் கொன்று மீடியென விரும்பத் தேவர் முதலினோர் அஞ்ச வருவதுகண்டு வடவையோ, கடலோ, அரனெற்றித் தழலோ பாரொடு திசையைச் சுட்டு

விசும்பை யளாவித் துவரையினடைந்தது என்றுரைக்கச் சூதுவி னையாடிக் கொண்டிருந்த கண்ணன்கேட்டு கிருதகியின் வரலாறறி ந்து விரலுகிர் தெறித்துப் பின்னும விளையாடிக்கொண்டிருக்க அவ் வுகிர் ஆழியாய்சென்று அக்கிருத்தியை யழித்தது. பின்பலரா மர் ஆயிர்பதிசென்று நகதினையு மசோதையையும் காண விரும்பின ராய்க் கண்ணனிடம் கூறிசென்று அவ்விருவரையும் பணிந்து அவர்களால் தழுவபபெற்று அவர்கள கண்ணினகினைந்து வருந்த அவர்களுக்கு கண்ணனது வெற்றிகளைக்கூறிச் சிறிது நாள்களில் கண்ணன் அவர்களைக்காணுமாறு ஆண்டெய்துமென்று கூறிந தேற்றி மகிழ்ந்திருந்து வசந்தகாலம வந்தெய்தப பலராமன் ஆயப் பெண்களுடன் பூங்காவடைந்து வாருணமதுவுண்டு அழைத்தவு டன் வராத காளிந்தியாற்றை அலப்படையாணிழுத்து ஆண்டுற்ற மயிந்தன்றம்பிதுவிந்தனைக்கொன்று நந்தினியுமை அசோதையையும் அடிபணிந்து விடைபெற்றுத் துவரையடைந்து அன்னை பிதாக்களை அடிபணியக் கண்ணன் உருக்குமிணிப் பிராட்டியாருடன் அவனடி பணிந்து வாழ்த்தப்பெற்று மகிழ்ந்தினிதுறையும் நாளில் (முன் அரணுதல் விழித்தியாலிறந்த மதனன் அன்று அமரர்களுடன் இர திசென்று வேண்ட அதற்கிரங்கி அரன்கூறியபடி) உருக்குமிணிப் பிராட்டியாரின் மணிவயிற்றின் மன்னினன். பிராட்டியார கரு வுற்றதுகண்டு எல்லாரும் மகிழ்ந்தினிதிருக்க ஆறுமாதமானபின் வேதவிதிப்படி செய்யவேண்டிய சடங்கைப் பிராடடியாருடன் ஓ ராதனத்திருந்து இயற்றி உரியகாலத்தில் குமரன் சனிக்கப்பெற்று மதனன் என்றுபேரிட்டு அந்தணர் முதலினோர்க்கு வேண்டுவன வெறுப்ப நல்கினன். உருக்குமிணிப் பிராட்டியார் தனயனுடன் மகிழ்ந் தேழ் தினம்வரையிற் செல்ல முன், மதனன் அரணுதல் விழித்தியா லெரிந்தவுடனிரதியைப் பற்றிச்சென்ற சமபரன் துவா ரகையிற் பிராட்டியார் மணிவயிற்றில் மதனன் சனித்தமையை நாரதமுனிவரால் அறிந்துவந்து மதனனைக் கைக்கொண்டு சென்று கடலிடைவீசினன். பின் அம்மதனன் கடலகத்துள்ள ஓர் மீனுல் விழுங்கப்பட்டு அதனை வலைஞர்பிடித்துச் சம்பரனிடம்தர அவன் அதைச் சமைப்பதற்காக பரிசாரகரிடத்துக்கொடுக்க அவர்கள் அதைப்பிளந்து கண்டகுழவியை, இரதியானவள் தன்கற்பழியா வண்ணம்படைத்து வைத்திருந்த மாயாவதி யிடைக்கொடுப்ப அக் குழவி மதனனென்று நாரதனுல்அறிந்து இரதிதேவி அக்குழவி யை வளர்த்து மாயம்பலவும் பயிற்றிப்பதினருண்டானவுடன் உண் மையறிவிக்க மதனன் தேவியுடன் தேரேறிச சம்பரனைக்கொன்று

துவாரகையடைந்து பெரியாரடிபணிந்து வாழ்த்தப்பெற்றுக் கர்க்க னெய்தி யோமம்பண்ண நாமகரணுதி சமஸ்காரங்கள் செய்யப்பெற் று ரதியைமணந்து மகிழ்ந்தினிதிருந்தனன். கண்ணன் உருக்குமி ணிமுதலிய பதினாயிரத்தொரு நூற்றெட்டு மாதர்களும் தனித் தனிபப்பத்துக்குமரர்களோப்பெற்அவாகடகு மிகமகிழ்வூட்டிமகிழ்ந் திருக்குநாளில் நாரதமுனி கண்ணன் தன்மையறிய ஒவ்வொருவீட் டிலும்சென்று வீடுகள்தோறும் கண்ணன் ஒரோர்செயல் செய் திருந்து தன்னேவணங்கி யுபசரித்ததுகண்டு வாழ்த்திச்சென்றான். நாரதனேப் பணிந்தனுப்பிச் சிறுவர்களுடன் மகிழ்ந்தினி திருக்கு நாளின் மதனனிரதியுடன்கூடி அநிருத்தனேப்பெற அளவிலா நிதி யுதவி அகமகிழ்ந்தனன்.

சாலுவதேசத்தையாளும் பிரமதத்தன் மகார்களான அங்கி சடிபிகர்கள் அரனேநோக்கி அருந்தவஞ்செய்து திவ்வியாத்திரங்க ளேயும் பிங்கிருடி கும்போதரனென்னும் பெயருடைய பூதங்களி ரண்டையும அரனுதவப்பெற்று ஒருநாள் சனர்த்தன மறையோ னுடன் கானில் வேட்டைகருதிச்சென்று வேட்டையாடிச்சிறப்புறு காசிபன் விதிப்படிசெய்யும சத்திரயாகம்நோக்கிச் செல்லுபவர்கள் தவஞ்செய்யும் துருவாசனையும் சூழ்ந்த முனிவர்களேயும் சனர்த் தனமறையோன் தடுப்பவங்கேளாது இகழ்ந்து இடருறுத்த அம் முனிவர் குழாம்புடை சூழ்ந் துருவாசன் துவரையடைந்து கண்ண னிடம் கூறியிழந்த ஆடையாதிகள் உதவப்பெற்றிருந்தனர். அங்கி சன் அரசர்களெல்லாரிடத்தும் திரைவாங்கித் தன்தந்தையை ராஜ சூயயாகம்செய்விக்க நினேத்து சனர்த்தனவேதியனே நோக்கி நீகண் ணனிடம்சென்று உப்புடன் இங்குறுமாறுரையென்றுகூறி விடுக் கச்சனர்த்தனன்அக்கொடியோனுக்கஞ்சித் துவரையடைந்து அங் கிசன் கூறியவற்றைக்கூறலும் கண்ணன்கேட்டு புட்கரசரசிஞ ளேப் போர்க்குவரச்சொல்என்று சனர்த்தனனுடனுரைத்து சாத் தகியையும் அவனுடன்அனுப்பி உரைப்பித்து அங்கிசன் போர்வி ரும்பியதறிந்து அவனேப் புட்கரசரசில் கொல்வதாகக்கூறி முனிவர் களே அடிபணிந்து அனுப்பினன். சாத்தகியும் சனர்த்தனனும் சாற்றியதுகேட்டு அங்கிசன் அனுசனுடன் நால்வகைச்சேனைகளே யும் புடைசூழப்புட்கரசரசில் எய்த அதன்முன்பே சாத்தகி கிருத வன்மாமுதலினேர்சூழப் படையுடன் சென்றிருந்தகண்ணன் சாத் தகிமுதலினேரால் அங்கிசன் படைகளே அழித்துகொடும்போர்புரி கும்போதரன் பிங்கிருடியென்னும் பூதங்களேயழித்து அங்கிச

னுடன் போர்புரிந்து அவன் காளியமடுவிற்குதிக்கத் தானும் அத னுட்குதித்து அவனைக்கொன்று மீண்டனன். அவன்தம்பிடிபிகன் தமயனைக்காணுதுகண்ணனைக்கேட்டுக் காளிந்தியிற்றேடிக் காணது கரையேறிக் கண்ணனைநோக்கி நீயே என்தமயனைக் கொன்றுயென் றழுதரற்றி நாவைபபிடுங்கிக்கொண்டிறந்தனன். இவ்வாறு அங்கி சடிபிகர்களிறந்ததுகண்டு எல்லோருமகிழ்வுறக் கண்ணன் புட்கர சரசில் எய்தியதறிந்து நந்தனு மசோதையும ஆயர்குழாங்கள்சூழ அடைதலும் கண்ணன்அகமகிழ்நது நந்தனையும அசோதையையும் அடிபணிந்து ஆயர்களைத்தழுவி அளவளாவியிருந்து பழமைபேசி விடைபெற்றுத துவரைஅடைந்தனன். பின்மாதவன் மக்களுக்கு மணமுடித்து மனமகிழ்ந்திருக்கு நாள்களுள் ஒருநாள் பானுசாம் பன் முதலினோர் வேட்டையாடச சென்றவர் காட்டகத்துள்ள ஓர் பாழ்ங்கிணற்றில் ஓர்பெரிய ஒந்திகண்டு கயிற்றுறற்கட்டி அனைவரும இழுத்து வராதிருந்தமைகண்டு வீடுசென்று கண்ணனிடம் கூறக் கேட்டுடனே தேரேறிச்சென்று அதன்வாலினைத்தொடலும் அவ் வுருமாறி அழகுறு பூருவவடிவமுற்று நின்றுனைக்கண்டின் வரலா றுரையென அவன்கண்ணைநோக்கி அடிபணிந்து தான் அயோத் தியில் அரசபுரிந்திருந்த சூரியவம்சத்தில் இக்குவாகு மன்னன் மகன் நிருகராசன் என்பதையும் தான்வைதிகப் பிராமணன் ஒரு வனுக்குத் தானஞ்செய்த பசு அவனைத்தப்பி தன்னிரையடைந்த தறியாது அதை மற்றொரு வேதியனுக்குகொடுக்க வேதியர் இரு வரும் அதன்பொருட்டுக் கலாய்த்து ஒருபசுவையே இருவருக்குந் தானங்கொடுத்ததற்காகத் தன்னை ஒந்தியாமாறு சபித்ததையும்கட் டுரைத்து வணங்கிச்சென்றனன். பின்கண்ணன் ஆரண்மனைஅடைந் திருந்து ஓர்நாள் உத்தவனைப்போசகடகர்க்களுப்பி உருக்குமின் பேத்தி உருக்குமிஎன்பானைத் தன்பேரன் அநிருத்தனுக்குப்பெண் பேசி அலாயுதன் முதலினோருடன் அங்குசென்று மணமுடித்த னன். அக்காலையில் உருக்குமின் கலிங்கமன்னனும் கலந்துபேசி பலராமனுடன் சூதாடி இருமுறையும்தோற்றும் தான்வென்றதா கக் கூறியதுமன்றிப் பலராமன் சூதிற்றோற்றிலேனென்று பொய் யும் கூறினனெனப் பறைசாற்றுமாறைக்கப் பணிக்கொடியோன் வெகுண்டு அக்கொடியோனைக்கொன்று கலிங்கனையும் அடித்துத் தேரத்திவிட அஃதறிந்து வருந்திய பிராட்டியைத்தேற்றி உருக்கு மினுக்கு உத்தரகிரியைகள் செய்வித்து அவன் மகனுக்குமுடிசூட் டிஊரனீடந்தனன். பின் துரியோதனன் மகள் இலக்கணைசுயம்வரத் துக்கு மற்றஅரசர்களுடன் சாம்பனும் சென்றிருக்க இலக்கணை

அவணிவிரும்பி மாலையிடலும் துரியோதனன் கோபித்து அவணி யிழித்துரையாடிச் சிறைபடுத்த நாரதனால் அஞ்தறிந்து கண்ணன் வெகுண்டெழுந்ததுகண்டு அலாயுதன் தடுத்திருதத்தான் அத்தி பதியடைந்து அரவக்கொடியோனுட னயந்துபேசி அவ ணிணங்கா மையால் அத்தினபுரத்தைப்பேர்ந்துக் கங்கையில் வீழ்த்தீப் புகு தலும் அரசர்களுடன் அரவக்கொடியோனஞ்சி விளைந்ததை வீடு மனல்அறிந்து அலாயுதனை அழைத்துயணிந்து அவன்கூறியபடி தன்னரிவையைச் சாம்பனுக்கு மணம்புணர்த்துப் பொருள்கள்பல சீதனமாகதத்த மகிழ்ந்து மைந்துடன் துவரையடைந்தான்.

மாலோனுக்கு மூவடிமண்ணுதவிய மாவலிமைந்தர் நூற்று வருட் தலிவனுய்சகிறந்த வாணசுரன் கயிலையங்கிரியில் வீற்றிருக் கும் கண்ணுதற்கடவுளை வணங்கிப் பூசிதனு யாவர்பொரினும் அரன் வந்து காக்குமாறு வரம்பெற்றுச் சோணிதபுரத்திற்கும் பாண்ட மந்திரியுடனிருந் துலகாண்டுவருபவன் கயிலையடைந்து காளகண் டனை இறைஞ்சித் தன்கைத்தினவுதிருமாறு போர்செய்வாரையருள வேண்ட அதுசோணிதபுரத்தின் சிகரத்திற் கட்டியுள்ள கொடிகிழ் வீழுங்காலத்து வாய்க்குமென்று வருக்கக்கேட்டு மகிழ்ந்தூர் சென் றிருந்தனன். பின் அவன்மகளாகிய அழகிற்சிறந்த உடாங்கனை யென்பாள் நாடோறும் கயிலையெய்தி உமைபவளுள்ள மகிழவீனை யிசைத்து வருபவள் உருத்திரன் உமாசமேதனுகவுறைவதுகண்டு எனக்கோர் கணவன், எப்போதுவாய்க்குமோ என நினைப்ப, அம் பிகை அஞ்துணர்ந்து உடாங்கனையைநோக்கி, நீ கனவில் ஓர் நாய கனைக் காண்குவை அவனே உன்னைமணபபனெனக் கேட்டு மகிழ்ந் துதனதிருக்கைசேர்ந்தவள் பொன்மணி மண்டபத்திற் மென்மலர மனிமிசைததுயில் புரிகையில் ஓர்சோலையில் அரசிளங்குமரனெரு வன்றன் குழலிடை நன்மலர் புனையக்கனவுகண்டு விழித்து அக்கு மரனைக்காணுது வருந்த அஞ்தறிந்த சித்திரரேகை பலர்வடிவங்க ளையும் வரைந்து காட்டி அவள் விரும்பிய மன்னவன் அநிருத்த னென்றறிந்து இரவிடைத் துவாரகை சென்று உருக்குமியுட னுரங்கு மநிருத்தமனைக் கொண்டுவந்து உடாங்கனையின் மணிமண் டபத்தின் மஞ்சமீதுவைத் துடாங்கனையுடன் கூறக்கேட்டுச்சென் று அநிருத்தமனுடனே கூடிக்குலாவி யிருந்தனள். இதைச்சில காரியராலுணர்ந்த வாணசுரன் தன்மகள் மனையிலிருக்கும் மானிட னைச் சிறைப்படுத்துங்கள் என்று சிற்சில படைவீரர்களை அனுப்ப அவர்கள் அவ்வநிருத்தனுடன் போர்க்காற்று திரிந்ததறிந்து வா

ணன் தானே சென்று நெடுநேரம் போராடியதை அவனை வெல்ல முடியாமல் கும்பாண்ட மந்திரிகூறியபடி மறைந்துநின்று நாகபாசத்தாற் கட்டிச் சிறைப்படுத்தினன். அங்கே துவாரகையில் சித்திரலேகை அநிருத்தமனை எடுத்துக்கொண்டு வந்தபின்உருக்குமிவிழித்துக் கீனவனிக்காணை தரற்றக்கேட்ட உருக்குமிணிமுதலிய டல்ரும்அழுதிடக்கண்ணன்தேற்றி அநிருத்தமனையாவர்கொண்டுசென்றிருப்பினு மீட்டு வருவோமென்று வெகுண்டுரைத்த சாத்தகிமுதலினோர் சொற்கைகொண்டு நாரதமுனிவர் வாணசுரன் அநிருத்தமனைச சிறைப்படுத்திய திறமாகிய செயல்களை யுரைக்கக் கேட்டு, அலாயுதனும் சாத்தகியும் மைந்தர்களும், சேனைகளும் சூழச்சென்று வாணன் கரங்களைத்துணித்து அரன் வேண்டியபடி நாற்கரம் விடுக்க வாணன், கண்ணன் கான்மிசையிற்பணிய மகிழ்ந்து அவன் கூறியபடி உடாங்கனையை அநிருத்தமனுக்கு மணம் புணர்த்து மகிழ்ந்து துவாரகையடைந்து வப்புடனிருந்தனன். பின் ஓர்நாள் ராஜசபையில் கண்ணன் வீற்றிருக்கையில் மகதனும் சிறையிடப்பட்ட இருபதினையிர மன்னவரும மகதனைக்கொன்று தங்கள் துன்பம் துடைக்குமாறு வேண்டி அனுப்பிய ஓர் தூதுவன் வந்து கண்ணனை வணங்கித்தான் வந்த வரலாறுரைத்துக் கொண்டிருக்கையில் நாரத முனிவர் வந்து கண்ணனை வாழ்த்தித்தருமன் தந்தை விரும்பியபடி இராஜசூயயாகஞ்செய்ய நினைத்து அறிவிக்குமாறு அனுப்பினமை கூறினர். அதுகேட்டு இந்திரப்பிரத்தமடைந்து தருமனுடன் கூறி வீமனையும, விசயனையும் அழைத்துக்கொண்டு வேதிய வேடங்கொண்டு மகதனிடம் சென்று அவனிடம் போரிரந்து வீமனுல் அவனைகொல்வித்து அரசர்கள் சிறைநீக்கி அவன் மகனுக்கு முடிசூட்டித் தருமனது வேள்விக்கு வருமாறு வழுத்திவிட்டு வீமனையும் விசயனையும அழைத்துக்கொண்டு இந்திரப்பிரத்தம் போய்ச்சேர்ந்தனன்.

பின் தருமன் வடக்கில் வாசவன் மைந்தனையும் கிழக்கில் வீமனையும் தெற்கில் சகாதேவனையும மேற்கில் நகுலனையும் விடுத்து நாற்திக்கிலுள்ள அரசர்களை வென்று திரைகொடெய்துமாறு செய்யப் பணிக்கவும அவர்கள் சென்று அவ்வாறு புரிந்து வருதலு மகிழ்ந்து மண்டலத்தரசர்களும் மாதவரும் வந்தபின் வேதவிதிப்படி வேள்வி தொடங்கித் திக்குபாலகர் முதலினோர மகிழ வேள்வியை முடித்தபின் அக்கிரபூசையை யார்க்களிப்பதென வினவ சகாதேவன் அது வாசுதேவனுக்கே வழங்கவேண்டு மென்றுரைத்

கத் தருமன் மகிழ்ந்தது செய்யத் துணிதலும் சேதிபனுகிய சிசு பாலன் கண்டு வெகுண்டு கண்ணனே இழித்துப்பல பிதற்றலும் அவன் தாப் வேண்டியவாறு அச்சிசுபாலன் கூறிய இழிமொழிகள் நூறெண்ணிப்பின் அவனைப் போருக் கழைத்து அவனுடன் சிறிது நேரம் போர் புரிந்து ஆழியாலவன் கழுத்தரிந்து அவனுயிர் சோதியா யெழுந்து தன்னடி யடையச்செய்து தருமனுல் வேள்வி யினக்கிர பூசையேற்றினிதிருந்தனன். பின் தருமன் அந்தணர் முதலினோர்க்கு அளவில்லாப் பொருள்தந்து அனுப்பி மகிழ்ந்தினி திருக்க ஐவருடன் அஞ்சன வண்ணன் மகிழ்ந்தினி திருந்தனன். அக்காலமுன் பிராட்டியாரைத்தேரேற்றிவருகையில் உருக்குமியு டன் கூடிக்கண்ணனுடன் போர்புரியவந்து தோற்றமுடிய சாலு வன் அரனை நோக்கித் தவம் புரிந்து வரம்பெற்றச்சேனை புடை சூழத் துவரையடைதலும் அங்குள்ள மாரவேள் முதலினோ ரெதிர்த்துப் போர்புரியும் தன்மையை நாரதர் கூறக்கேட்டுக்கண் ணன் உடனே சத்தியபாமையுடன் தேரேறித்துவாரகையடைந்து சாலுவனுடன் போர்புரிந்திருந்தபடியே அத்தினபுரியில் அரவக் கொடியோன் ஆஞ்ஞையின்படி, அவன், அனுசன்செய்த மான பங்கம் சகிக்கலாற்றாது, தன்னைக்குறித்தோலமிட்ட பாஞ்சாலிக்கு, ஆடையகூயமாக்கிப் பின், ஆழியேவிச்சாலுவன், முடிதுணித்த னன். பின் எதிர்த்துவந்த தந்தவக்கிரனையும், அவன் தம்பி வீடு ரதனையுங்கொன்று, வசுதேவன் முதலினோரை வணங்கி மகிழ்ந் திருந்தனன். சாலுவன் துவாரகை அடைந்தது கேட்டுக் கண் ணன் இந்திரபிரத்தம் விட்டு வந்தபின் அரவக்கொடியோன், ராச சூய யாகத்திற்குத்தான்வந்து, நீரும் பலிங்குந்தோன்றாது தடு மாறியதுகண்டு துரோபதை நகைத்ததைப்பற்றிப்பெரு வருத்தத் தையுடையவனுய் ராசசூயத்தில் தான்கண்ட தருமன் வாழ்வைப் பற்றிச் சகிக்காதவனுகச சகுனியோடுகூடி யோசித்துக்கபடமாகப் பாண்டவர்களைத் திருதராட்டிரனுல் வீதுரனையனுப்பித் தருவித்து சகுனியோடுச் சூதாடுமாறுசெய்து, தருமன் நாடுநகரங்களையும், உடன்பிறந்தாரையும், தன்னையும், மனைவியையும் பணையமாகவைத் துத் தோற்றுவிட, அரவக்கொடியோன் ஐவரையும் இழிவுபடுத்தி, அவரில்லாளாகிய துரோபதையை அவையிடை இழுத்து, மான பங்கப்படுத்த அப்போது உண்டாகிய, கெட்ட உற்பாதங்களையும் துச்சாதனன் உரிந்தசேலை இடையறுது வளர்ந்ததுங்கண்டு, திரு தராட்டிரன் அஞ்சி நாடுமுதலியதந்து ஐவரையும் அனுப்ப, அர வக்கொடியோன், பொறுக்காது மீண்டும அழைத்துக் காட்டிற் பன்

னிரண்டு வருஷமும் நாட்டில் மறைந்து ஓர்வருஷமும் ஆகப்பதின் மூன்று வருஷமும் கழித்துவந்தால் நாட்டையுதவுவேன் என்று கூறிவிடுக்கத் தருமன், அன்னையை அத்திப்பதியி லிருத்தி அந்த ணர் புடைசூழ அதுசருடன் துரோபதைவரக் கானகமடைந்தனன்.

அஃதறிந்து கண்ணன் காடுசென்று ஐவரையும அவரில்லா னேயும் தேற்றித் துவரையடைந்தனன். அதன்பின் ஐவரும் அந தணர் சூழச்சென்று காசிபமுனிவர் ஆச்சிரமத்தையடைந்து வண ங்கி, ஆசீர்வதிக்கப்பெற்று, மகிழ்ந்திருக்குநாளில், வியாசமுனிவர் அங்குவந்தனர். ஐவருமவரடியில்விழ, அவர் ஐவரையும் வாழ்த் தியபின் காசிபமுனிவர் அவரைநோக்கி, சந்திரகுலத்துவந்த குரு குலமரபு கூறுக என அவர் அரவக்கொடியோன் சூதாட, ஐவரை யும விதுரனுல் அழைத்துவந்து வஞ்சச்சூதாடி வெல்ல ஐவரும காசிபமுனிவர் ஆச்சிரமமடைந்த திறுதியாகிய குருகுல சரிதத் ரங்களைக்கூறக் காசிபமுனிவர் மகிழ்ந்துகேட்டார். பின் தருமன் எழுந்து வியாசனடிபணிந்து அரவக்கொடியோனுல் ஒப்பும இடர் ஒருவும் வழிகூறுக எனலும் வாதராயணர் அன்போடுநோக்கி தக் கன் மகத்தையழித்த சிவபிரானைக்காணி னற்கணியீவனென்றார். பின் தக்கன் மகங்கெடுத்த வரலாற்றை அம்முனிவர் பிரான் கூறக் கேட்டு மகிழ்ந்து அவர்மொழிப்படி, அரணை நீங்கந்து தவம்புரியு மாறு அருச்சுனனைக்கயிலைக்குவிடுக்க அவனும் அங்குசென்று விபூதிருத்திராக்கதாரியாய் ஒருமைமனத்துடன் பரமசிவனைநோக் கித் தவம்புரிந்து பாசுபதாத்திரம்பெற்று அமராகோன் விரும்பிய படி அமருலகெய்தி இந்திரன் வேண்டியவாறு தேரேறிசென்று அசுரரைவதைத்துவந்து அரியாசனத்தி லிந்திரனுடன் சரிபெற விருந்து மவுலிசூட்டப்பெற்று ஊர்வசி நடனங்கண்டு மகிழ்ந்துகோ யிலிடையடித்துச் சென்றுரங்குவானிடை இந்திரன் சொல்லியபடி அவ்விடைவந்த உருப்பசிக்கு இணங்காஞப் அவள்சாபத்தாற்பேடி யாகிப்பின் இந்திரன் கூற்றுக்கிணங்கி உருப்பசி அவ்வடிவை அகற் றலும் கரந்துறையும் காலத்தெய்திக் கழியவருளென்ன அவள்அவ் வண்ணமேயருளினுள். பின்பார்த்தன் பாண்டவைக்கண்டு உரை யாடி மகிழ்ந்து தன்பிரிவுபற்றி வருந்தி வியாசரால் தேற்றப்பட் டிருந்த தருமன்முதலினோர் முன்சென்று மகிழ்ந்திருந்தனன். பின் வீமன் பாஞ்சாலியின்பொருட்டு சுகந்தியமலர்கொண்டுவர அளகா புரி செல்லும்வழியில் மாருதியைக்கண்டு பின்நடக்கும் பாரதயுத் தத்தில் பார்த்தன் தேரின்மீதிருந்து காக்குமாறு வரம்பெற்று அ

ளகாபுரியடைந்து தமித்தாருடன் போர்புரிந்துவென்று மலர்பரித்து வந்து பாஞ்சாலியின் முடிசூட்டினன். பின்பொருநாள் அவள் விரும்பியபடி பாரிசாத மலருங்கொணர்ந்து தந்தனன். பின்பொருநாள் வீமன் மாதவசியொருவன் அருந்துமாங்கனியைக் கொய்துவிடத் தருமன் முதலினோர் அத்தவசி சபிப்பானேயென் றஞ்சும்போது அஞ்சனவண்ணன் அடைந்து ஐவரையும் அவரில்லாளையும் தத்த மூள்ளத்துள்ளதைக் கூறுமாறுரைக்க வவருமவ்வாறேகூறக் கனி மூன்போல் மரம்பொருந்தியது. அத்தினபுரியிலரவக்கொடியோன் ஆயிரம்வித பதார்த்தங்களுடன் துருவாசமுனியை யுண்பித்துக் காட்டிற்சென்றுதருமனிவ்விதமுண்பியானேல்சபித்தேகுதுஎன்று வேண்டமுனிவனிசைந்துவந்து தருமனோக்கிப் பொற்கலத்தின் ஆயிரம்வருக்க பதார்த்தங்களுடன் அன்னமளியாயேல் சபிப்ப னெலதுரைக்க முனிவனீ ராடி வருமாறுவேண்டவு மவன் நீராடிச் சென்றனன். சென்றவுடன் ஐவரும்வருந்தி யஞ்சனவண்ணனினைத்தலும் அவனும் உடனேவந்து காரைச்சாகம் இஞ்சிமேதிதததியிவைகளுடன் அன்னத்தை யூனவீலியில் முனிவனுக்கிடதலும் ஊனவிலைபொற் கலங்கார்த்ததென்பதும் காரையிஞ்சி தயிர் இவை யாயிரம் பதார்த்தசமமாமென்பதும் உணர்ந்த துருவாசன் அன்புடனருந்திச்செல்ல மகிழ்ந்தினிதிருந்தனர். பின் துரியோதனன் சித்திரசேனனுல் கட்டுண்டு செல்வதை பானுமதியின் அழுகையாலறிந்து தருமன் வீமன் மறுத்தலும் விசயனைப் பாணிக்க வவன்சென்று மீட்டுவந்தனன். தருமனுல் தலைதப்பிச் செல்கின்ற துரியோதனன் தன்னைநோக்கித் துரோபதை நகைத்ததுபற்றி வருந்திச் செல்பவனைக்கண்டு சயித்திரதன் தான் துரோபதையைப் பற்றித்தருவேன் என்றுகூறிக் காட்டில்வந்து சமயம்பார்த்து அவளைப்பற்றித் தேர்மேன்மீடலும் பீமன் ஓடிவந்து உதைத்து தலையில் ஐஞ்சிகையாக்கி இழுத்துவந்து தருமன்முன் விடுதலும் அவன்விடச்சொல்ல மார்பின் மோதிவிடுத்தான். பின் சிந்துபதி சிவனைநோக்கித் தவம்புரிந்து ஒருதினத்தில் மட்டும் ஐவரைச் செயிக்குமாறு வரமும் தண்டமும் கொன்றைமாலையும்பெற்று அத்தினபுரியடைந்து நடந்தவற்றை யுரைக்கக்கேட்டுத் துரியோதனன் காளமா முனிவரைக்கூவி அபிசாரயாகஞ்செய்து ஓர் பூதத்தை எழுப்பிவிட, அது காட்டிற்புகுமுன் கண்ணன் திருவருளால் ஐவருமிறந்துவிடக்கண்டு, அப்பூதம் வெகுண்டுசென்று, காளமாமுனியையே கொன்று சென்றது.

பின் ஐவரும், நடவனல் உயிர்பெற்றார்கள். இவ்வாறு பன்னிரண்டு வருஷமுங்கழிய ஐவரும் விடஜலம் பருகி யிறந்தார்களென்றுசுமாறு அந்தணரைவிடுத்துவிட்டு, ஐவரும் அவரில்லாளரும் மாறுவேடம்பூண்டு விராடநகரில் வதிந்தனர். அங்கிருக்குங்காலையில் தாரோபதையின்மீது காதல்கொண்ட கீசகனையும அவனுடன் பிறந்தாரையும் வீமன் வானுவகத்தேற்றினன். மாடுபிடி சண்டையில் வெற்றிகொண்டபின், மறைந்து கழிக்கவேண்டிய ஒருவருஷமுமுடிய வெளிப்பட்டு, தங்கள் நாடுதருமாறு உலூகனைத் தூரியோதனனுடனனுப்பி யவனிசையாமையை யறிந்து வாசுதேவனைப் படைத்துணைபெற்றுத் தருமன் கண்ணனையும் ஒருமுறை தூதனுப்பினன். கண்ணனும் அத்தினபுரியடைந்து விதுரன் மனையிற்றங்கி மற்றைநாள் தூரியோதனன் அவையிடைச்சென்று ஐவர்க்காக நாடிறந்து அதற்கவன் சிறிது மிசையாமையை யறிந்து குருக்கேத்திரத்தில் ஐவருடன் போர்க்கு வரக்கை யறைந்து தரவேண்ட அவன் வெகுண்டுரைத்த புன்மொழிகளைக்கேட்டு இளநகைபுரிந்து அவை ஒரீஇவிதுரன் மனையடைந்திருந்து அவன் தன் வீட்டில் கண்ணனுக் கிடந்தந்துபசரித்தது பொருளுய்த் தூரியோதனன் வெகுண்டுரைத்த பழிமொழிக்காற்றாது விதுரன் வில்முறித்தெய்தியதை, அவனுல் உணர்ந்து மகிழ்ந்து அன்றிரவிற் பொய்யாசனம்வகுத்துத் தூரியோதனன் மற்றைநாள் தூதுவரால் அழைப்பிக்க அங்குசென்று அவ்வாதனத்தின் மீதிருந்துவீழ்ந்து விசுவரூபமெடுத்து உள்ளிருந்த மல்லர் முதலாயினரை வதைத்துப் பின் பலரும் வணங்க முனிவுதவிர்ந்து அவ்வவைவிட்டு வெளிப்படும்போது அசுவத்தாமனை அரவக்கொடியோன்நம்பாவண்ணம்செய்து கண்ணன் கவசகுண்டலங்களை இந்திரனந்தணவடிவங்கொண்டுகவரவும், கண்ணன் மைத்தன் என்பதைக் குந்திக்குணர்த்தி அரவப்படை ஒருமுறையன்றி மறுமுறையெய்து அருச்சுனனைக் கொல்லாவண்ணம் வரம்பெறவுமியற்றி விராடபுரியடைந்து வியாளகேதனன் கூறியதை ஐவரிடம் அறைந்து மகிழ்ந்தனன். பின் தூரியோதனன் களப்பலியூட்ட நியமித்திருந்த அமாவாசியைக் கண்ணன் முன்னாள்நாளாக்கி அன்று அரவானை பலியூட்டுவித்து ஏழக்குரோணி சேனையுடன் விராடபுத்திரனுகிய சிவேதனைச் சேனபதியாக்கி ஐவருடன் குருக்கேத்திரபூமி சென்றனன்.

அன்று குருக்கேத்திரத்தில் கூடியிருந்தவர்களைநோக்கி இவ்வளவுபேரையும் நாம் கொல்லபுரிய வேண்டுமே யென்றெண்ணி

